1994 மே 2]

செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 சதவீதமே கேட்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் ஜவ்வாது மலைப்பகுதியில் 11 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 473, திரு.வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

473—

அந்தியூர் தொகுதியில் புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குதல்

** 16627—திரு.வே. பெரியசாமி:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் கீழ்வாணி ஊராட்சியில் 'இந்திரா நகர்' பகுதியிலும், குப்பாண்டாம்பாளையம் ஊராட்சியில் 'நஞ்சுண்டாபுரத்திலும்' பள்ளிப்பாளையம் என்ற ஊரிலும் புதிய ஆரம்பப்பள்ளிகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி கீழ்வாணி ஊராட்சியில் இந்திரா நகர் பகுதியிலும், குப்பாண்டாம்பாளையம் ஊராட்சியில் பள்ளிபாளையத்திலும் புதிய ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. இதைத்தவிர அந்தியூர் தொகுதியில் கூர்மையானூர், கூழிவலசு ஆகிய இடங்களில் தொடக்கப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. கருத்துரு பெறப்படாததால் நஞ்சுண்டாபுரத்தில் புதிய பள்ளி தொடங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கே வாழும் மனிதருக்கெல்லாம், பயிற்சி பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டுமென்று பாடினார்கள் பாட்டுக்கொரு புலவன் பாரதியார் அவர்கள். அந்த பாரதியார் அவர்களுடைய கனவை நனவாக்கும் பொருட்டு இந்த ஆண்டு பட்ஜெட்டில் 2002.46 கோடி ரூபாயை இதயதெய்வம், நாங்கள் எல்லாம் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற, ஒப்பற்றத் தலைவி

[1994 மே 2

அவர்கள் கல்விக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். மொத்த வருமானம் ரூ.9,083.53 கோடி தொகையில் இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 22.46 சதவீதம் ஆக இருக்கிறது. இந்த நிலையில்தான் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் தட்டகரை, வெஜிலட்டி, மடம், செங்குளம் இப்படி பல்வேறு பள்ளிகள், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, இந்தப் பள்ளிகள் எல்லாம் ஏறத்தாழ 11 பள்ளிகள் ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக கொங்கடை, சோழ அணை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு ஊரில் ஆரம்பப்பள்ளி தொடங்கக் கோரும் கேள்வி. இதற்கு இவ்வளவு பெரிய துணைக் கேள்வியா?

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமாக பள்ளிகளை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில். புனித ஆட்சியில். நல்லாட்சியில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பள்ளிகளை வழங்கி இருக்கிறார்கள். கடல்வாடிபுரத்தில் — நான் சொல்லியிருக்கிற நஞ்சுண்டாபுரத்தில் இந்த ஒரு இடத்தில் தான் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. கருணை உள்ளம்கொண்ட இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கருத்துருவைப் பெற்று, ஆரம்பப் பள்ளியை ஆரம்பிக்க முயற்சி செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்துருவை அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விரைந்து சென்று நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் சொன்னதைப் போல, இன்னொரு 10 இடங்களில்—இங்கே ஆரம்பித்த 11 பள்ளிகள் எல்லாம் ஆதிதிராவிடர்கள், மலைவாழ் மக்கள் வாழ்கிற

1994 மே 2]

இடங்களில் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் கல்வித்திறத்தில் முன்னேற்றம் காண இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள் என்பதை நாடு அறியும், நல்லவர்கள் அறிவார்கள். ஆகவே நான் கருத்துருவைப் பெற்று அனுப்புகிறேன். அருள்கூர்ந்து இந்த ஆண்டு 4 பள்ளிகள், இதையும் சேர்த்துச் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95-ல் தொடக்கப்பள்ளிகள் தொடங்குவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கருத்துரு வரப்பெற்றால், அடுத்த நிதி ஆண்டில், அது பரிசீலிக்கப்படலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 474, திரு கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

474—

பர்கூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

*** 19971*—திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, பர்கூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

DTP–53/134-5